




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 257 | 11.03.2026 | WEDNESDAY | MAASI : 27 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 257 | 11.03.2026 | புதன்கிழமை | மாசி : 27 | விலை : ரூ.5/–


## 5 ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவரும் குற்ற செய்திகளால்

# "பொதுமக்கள் அச்சம்"

## எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றச்சாட்டு

சென்னை: மார்ச்.11-

'தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றச் செய்திகள் தொடர்ந்து வெளிவருவதால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்' என்று எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கைகளில் கூறியிருப்பதாவது:

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி: கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அருகே முதியவர் கொலை செய்யப்பட்டு, மூதாட்டி மனைவிக்கு பாலியல் வன்கொடுமை, சென்னை திரிசூலத்தில் இருவர் படுகொலை, தென்காசி மாவட்டம் சங்கரன் கோவில் அருகே விவசாயி படுகொலை... இப்படி தொடர்ச்சியாக வரும் கொலை செய்திகள், பாலியல் குற்றச் செய்திகள் மக்களிடையே அச்ச உணர்வை அதிகரித்துள்ளது.



தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன்: சென்னை திரிசூலத்தில் 17 வயது சிறுவன் உட்பட இருவர் மர்ம நபர்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகளாக கொலை, கொள்ளை, பாலியல் சம்பவங்கள், அரிவாள் வெட்டு ஆகியவை அன்றாட நிகழ்வுகளாகி விட்டன.

பாமக தலைவர் அன்புமணி: சென்னை பல்லாவரத்தை அடுத்த திரிசூலம் பகுதியில் இருவர் கொடூரமான முறையில் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டிருப்பதும், ஊத்தங்கரை அருகில் முதியவர் படுகொலை செய்யப்பட்டு அவரது மனைவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டிருப்பதும் அதிர்ச்சியளிக்கின்றன.

தவெக கொள்கை பரப்பு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா: அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகம், திமுக ஆட்சியில் அச்சமூட்டும் கொலைக்களமாக மாறி இருக்கிறது.

திமுக அரசாங்கத்தில் சட்டம் ஒழுங்கு எவ்வாறு சீர்குலைந்து போய் இருக்கிறது என்பதற்கு கடந்த ஒரு வாரத்தில் மட்டும் நடைபெற்ற சம்பவங்களே சாட்சி. இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.




## விளையாட்டு விடுதி மாணவர்கள் 2,600 பேருக்கு உபகரணங்கள்

### துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்

சென்னை: மார்ச்.11-

பயிற்சியின்போது காயம் ஏற்படும் அபாயத்தை குறைக்கும் வகையில் ரூ.39.59 லட்சம் செலவில் 2,600 விடுதி மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று நடைபெற்ற விழாவில், விளையாட்டு விடுதிகளில் டிஜிட்டல் சாதனங்கள் மூலம் பயிற்றுநர்கள் மற்றும் வீரர், வீராங்கனைகள் மேலாண்மை அமைப்பை உபயோகித்தல் மற்றும் வலுப்படுத்துதல் தொடர்பான பயிற்சியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

மேலும், விளையாட்டு வீரர்களின் தினசரி பயிற்சி தேவைகள், மறு சீராக்கம் மற்றும் முழுமையான உடல் நலத்தை மேம்படுத்தும் வகையில் விளையாட்டு விடுதிகளில் தங்கி பயிற்சி பெற்றுவரும் 2,600 மாணவர்களுக்கு ரூ.71.15 லட்சம் மதிப்பில் சாம்பியன்ஸ் கிட்களையும் துணை முதல்வர் வழங்கினார்.

அதோடு இந்த ஆண்டு புதிதாக விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்பட்டுள்ள 950 பேருக்கு ரூ.20.10 லட்சம் மதிப்பில் ஸ்மார்ட் வாட்சுகளையும் வழங்கினார். இந்த ஸ்மார்ட் வாட்ச் மூலம் மாணவர்கள் தங்கள் பயிற்சியின் அளவுகள், மறு சீராக்க நிலை மற்றும் தினசரி செயல்பாடுகளைக் கண்காணிக்க முடியும்.

மேலும், விளையாட்டு வீரர்கள் கடுமையான பயிற்சி மேற்கொள்ளும் போது காயம் ஏற்படும் அபாயத்தை குறைக்கும் வகையில் ரூ.39.59 லட்சம் செலவில் 2,600 விடுதி மாணவர்களுக்கு ஸ்போர்ட்ஸ் சயின்ஸ் உபகரணங்களை துணை முதல்வர் வழங்கினார்.

அதோடு தடகள விளையாட்டு மேலாண்மை செயலியின் பயன்பாடு குறித்து பயிற்சியாளர்கள், விளையாட்டு விடுதி மேலாளர்கள், மாவட்ட விளையாட்டு இளைஞர் நலன் அலுவலர்கள் மற்றும் மண்டல முதுநிலை மேலாளர்களுக்கான வழிகாட்டி பயிற்சியையும் அவர் தொடங்கிவைத்தார்.

இவ்விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர்செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மாவட்ட வருவாய் அலுவலர் வே.மணிகண்டன், பொது மேலாளர் எல்.சுஜாதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## 70,000 கணினி ஆசிரியர்கள் சட்டப்பேரவை தேர்தலை புறக்கணிக்க முடிவு!

கும்பகோணம்: மார்ச்.11-

அரசு பள்ளியில் பணி நியமனம் செய்யக் கோரி, வரும் சட்டப்பேரவைத் தேர்தலை புறக்கணிக்க 70 ஆயிரம் கணினி ஆசிரியர்கள் முடிவு செய்துள்ளனர். இந்தியாவிலேயே, தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில்தான் 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை கணினி அறிவியல் பாடம் இல்லாமல் உள்ளது.

மத்திய அரசின் சமக்ரா சிக்சா திட்டத்தின் கீழ் அனைத்து மாநிலங்களும் கணினி அறிவியல் பாடத்தை பிரதான பாடமாகவும், தனிப் பாடமாகவும் கற்றுத் தரும் நிலையில், தமிழக அரசு கணினி அறிவியல் பாடத்தை அரசுப் பள்ளியில் கொண்டு வராமல் உள்ளது.

ஆனால், மத்திய அரசு, கணினி ஆசிரியர்களுக்கு வழங்கும் நிதியை மடைமாற்றம் செய்து, அதை எமிஸ் ஆபரேட்டர்களுக்கு பயன்படுத்துகின்றனர். இதனால், அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கு கணினி அறிவியல் பாடத்தை கற்றுத்தர ஆசிரியர்களும் இல்லை, பாடங்களும் இல்லை.



மாணவர்கள் 5 பாடங்களை மட்டும் கற்று வருகின்றனர். எனவே, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் கணினி அறிவியல் ஆசிரியர்களை பணி நியமனம் செய்ய வேண்டும் என சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக தமிழ்நாடு பி.எட். கணினி அறிவியல் வேலையில்லா பட்டதாரிகள் சங்க மாநில துணைத் தலைவர் அ.ஆரோக்கியசாமி கூறியது: தமிழக அரசு, மத்திய அரசு வழங்கிய நிதியை மடைமாற்றம் செய்து கேரளாவைச் சேர்ந்த தனியார் நிறுவனத்துக்கு கணினி ஆய்வகங்களை நிர்வகிக்கும் ஒப்பந்தம் வழங்கி உள்ளது.

அதுமட்டுமல்லாமல், கணினி ஆசிரியர்களை நியமிக்க வந்த நிதியில், அந்தப் பணிக்கு கல்வித் தகுதி இல்லாதவர்களை நியமனம் செய்து அலுவலகப் பணிக்கு மாற்றிக்கொண்டுள்ளனர். இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சரிடம் பலமுறை முறையிட்டும் உரிய பதில் இல்லை.

இதன்மூலம், 70 ஆயிரம் கணினி ஆசிரியர் குடும்பங்களையும் நடுத்தெருவில் நிறுத்திவிட்டனர். எனவே, தமிழக அரசு, அரசுப் பள்ளிகளில் தகுதியான கணினி ஆசிரியர்களை நேரடியாக நியமனம் செய்ய வேண்டும்.

மத்திய அரசு வழங்கும் நிதியை கணினி ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும். இந்த கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் 70 ஆயிரம் கணினி ஆசிரியர் குடும்பங்கள் ஒட்டுமொத்தமாக சட்டப்பேரவைத் தேர்தலை புறக்கணிக்க முடிவு செய்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

## விஜய் வாகனத்தை பின்தொடர்ந்தபோது விபத்தில் சிக்கிய இளைஞருக்கு அன்பில் மகேஸ் ஆறுதல்

### அரசியல் செய்வதாக தவெக நிர்வாகி குற்றச்சாட்டு

தஞ்சாவூர்: மார்ச்.11-

தவெக கூட்டத்தில் பங்கேற்க விஜய் சென்ற வாகனத்தை பின் தொடர்ந்தபோது விபத்தில் சிக்கி காயமடைந்த மாணவரை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து ஆறுதல் கூறினார். தஞ்சாவூர் அருகே அய்யாச்சாமிபட்டியில் மார்ச் 4ம் தேதி தவெக நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது.

இதில், பங்கேற்க திருச்சியில் இருந்து தஞ்சாவூருக்கு வந்த தவெக தலைவர் விஜய்யின் வாகனத்தை பின்தொடர்ந்து இருசக்கர வாகனத்தில் வந்த, திருச்சி கல்கண்டார்கோட்டையைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களான விக்னேஷ்(19), அவரது நண்பர் ஷாருன்(19) ஆகிய இருவரும் விபத்தில் சிக்கினர்.

இருவரும் தஞ்சாவூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில், ஷாருனை நேற்று முன்தினம் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தஞ்சாவூர் எம்.பி. ச.முரசொலி ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

இந்நிலையில், "தவெக தலைவர் விஜய்யை பின் தொடர்ந்தபோது விபத்தில் சிக்கி காயமடைந்த மாணவர்கள் இருவரையும் தவெக நிர்வாகிகள் யாரும் மருத்துவமனைக்கு சென்று பார்த்து ஆறுதல் கூறாத நிலையில், தமிழக அமைச்சரும், எம்.பி.யும் மருத்துவமனைக்கு சென்று மாணவரை சந்தித்து ஆறுதல் தெரிவித்ததுடன், மருத்துவ செலவுகளை கவனித்துக் கொள்வதாக உறுதி அளித்துள்ளனர்" என்ற தகவல் சமூகவலைதளங்களில் பதிவிடப்பட்டுள்ளது.

அரசியல் செய்கிறர்கள்..

இதுகுறித்து தவெக மத்திய மாவட்டச் செயலாளர் விஜய் சரவணன் கூறியது: விபத்து ஏற்பட்ட நாளில், தவெக நிர்வாகிகள் சென்று பாதிக்கப்பட்ட இளைஞர்களின் பெற்றோரை சந்தித்து, ஆறுதல் கூறினர்.

முதற்கட்டமாக, ரூ.1 லட்சம் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் நிர்வாகிகள் நான்கு பேர் மருத்துவமனைக்கு சென்று, காயமடைந்தவர்களின் பெற்றோருக்கு உதவி செய்து வருகிறார்கள். ஆனால், தவெகவினர் பார்க்கவில்லை என கூறுவது முற்றிலும் பொய். திமுக அமைச்சரும், எம்.பி.யும் இதில் அரசியல் செய்கிறார்கள் என்றார்.

## சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு உரிமம் பெற்ற 2,364 துப்பாக்கிகளை திரும்ப ஒப்படைக்க வேண்டும்: காவல் ஆணையர் உத்தரவு

சென்னை: மார்ச்.11-

சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, உரிமம் பெற்ற 2,364 துப்பாக்கிகளை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என, காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, சென்னை காவல் ஆணையர் அருண் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சட்டப்பேரவை தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. அதற்கு முன்னரே தேர்தல் பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளில் சென்னை காவல்துறை ஈடுபட்டுள்ளது.

அனுமதி பெற்று வைத்துள்ள 2,364 துப்பாக்கிகளை உடனடியாக திரும்ப ஒப்படைக்க சம்மந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட்டுள்ளோம். காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உட்பட சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 24 சட்டப்பேரவை தொகுதிகள் வருகிறது.



அவற்றில் 5,445 வாக்குச்சாவடிகள் உள்ளன. இவற்றில் 1,077 பதற்றமானவை. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிசிடிவி கேமரா பொருத்தப்பட உள்ளது. சென்னையில் 5,055 ரவுடிகள் உள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் சிறையில் உள்ளனர். இவர்களில் 2,300 ரவுடிகளிடம் எந்த குற்றமும் செய்ய மாட்டோம் என எழுதி வாங்கி உள்ளோம். இந்த உறுதிமொழியை மீறினால் பிணையில் வெளிவர முடியாதபடி சிறையில் அடைக்கப்படுவர். பல ரவுடிகள் சென்னைக்குள் நுழையாதபடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமூக வலைதளங்கள்

வதந்தி, அவதூறு, உண்மைக்கு புறம்பான தகவல்கள் பரப்பப்படுவதை தடுக்க சமூக வலைதளங்களை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம். ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்படும் பணத்தை பறிமுதல் செய்ய 56 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளது.

அவர்களுடன் ஒருங்கிணைந்து போலீஸார் பணியாற்றுவார்கள். சென்னையில், இதுவரை 7 இடங்களில் மட்டுமே போராட்டம் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேர்தலை முன்னிட்டு 350க்கும் மேற்பட்ட இடங்களில் பிரச்சாரம் மற்றும் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி அளிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

மேலும், சென்னையில் ஒரு இடத்தில், ரோடு ஷோ நடத்த அனுமதிப்பது குறித்தும் ஆலோசிக்கிறோம். தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட மத்திய தொழில் பாதுகாப்பு படையினரும் வருகின்றனர். இவ்வாறு ஆணையர் தெரிவித்தார். அப்போது, நுண்ணறிவு பிரிவு துணை ஆணையர் ராமமூர்த்தி உடன் இருந்தார்.



# புளியங்குடியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 79வது நிறுவன தினம் கொடியேற்று விழா

புளியங்குடி, மார்ச். 11-

இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் 79 வது நிறுவன தின விழா, புளியங்குடி மேலப்பள்ளி வாசல் முன்பு மார்ச் 10 ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றது. நகரத் தலைவர் இ.மை.அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், கட்சியின் கொடியை மாவட்ட துணைச் செயலாளர் எம்.அப்துல் ரஹீம் ஏற்றி வைத்தார்.

வழக்கறிஞர் அணி மாநிலச் செயலாளர் ஜாகிர் அப்பாஸ் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் முகமது நயினார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகரச் செயலாளர் எம்.ஷேக் காதர் மைதீன் வரவேற்புரை ஆற்றினார். விழாவில் மாவட்ட முதன்மை துணைத் தலைவர் ஏ.அப்துல் வஹாப் கலந்துகொண்டு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தியாகம் நிறைந்த வரலாற்றுப் பின்னணியைப் பற்றிச் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் கட்சியின் முன்னாள் நகரச் செயலாளர் ஹபிப்புல்லா, மாணவர் பேரவை ஏ.ஆர். எஸ். ஷபீக், சுக்கூர், அமானுல்லா, பிச்சை கனி, முன்னாள் தலைமை ஆசிரியர் ஏ.சாகுல் ஹமீது, முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் பி.உசேன் மைதீன், மூத்த பத்திரிகையாளர் புளியங்குடி சாகுல் ஹமீது உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் நகரப் பொருளாளர் கொ.இ. முகமது அப்துல் காதர் நன்றியுரை வழங்கினார்.

# வணிக சிலிண்டர் நிறுத்தம்: புதுச்சேரியில் ஹோட்டல்கள் மூடப்படுவதாக அறிவிப்பு



புதுச்சேரி, மார்ச்.11-

வணிக சிலிண்டர் நிறுத்தத்தால் புதுச்சேரியில் ஹோட்டல்கள் மூடப்படும் என ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

ஈரான் மீதான அமெரிக்க, இஸ்ரேல் போர் காரணமாக புதுச்சேரியில் வர்த்தக ரீதியிலான சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. கையிருப்பில் உள்ள சிலிண்டர்கள் இன்னும் ஓரிரு நாட்கள் மட்டுமே வரும் என்பதால் ஹோட்டல்களுக்கு வர்த்தக ரீதியிலான சிலிண்டர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சுற்றுலா நகரான புதுவையில் 700க்கும் மேற்பட்ட ஹோட்டல்கள் உள்ளன. அத்துடன் ஏராளமான சாலையோர உணவகங்களும் இயங்குகின்றன. சுற்றுலா பயணிகள் பெரிய ஹோட்டல்கள் தொடங்கி சிறிய ஹோட்டல்களை நம்பி புதுச்சேரி வருகின்றனர்.

தற்போது வணிக சிலிண்டர் நிறுத்தம் தொடர்பாக ஹோட்டல் உரிமையாளர் சங்கம் தலைவர் பாஸ்கரனிடம் கேட்டதற்கு, "புதுச்சேரியிலுள்ள 700க்கும் மேற்பட்ட ஹோட்டல்களுக்கு நாள்தோறும் 1000 க்கும் மேற்பட்ட வணிக சிலிண்டர்கள் தேவை. சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டதால் நாளை (மார்ச் 11) முதல் படிப்படியாக ஹோட்டல்கள் மூடப்படும்" என தெரிவித்தார்.

# போர் எதிரொலியாக மூலப்பொருட்கள் விலை உயர்வால் திருப்பூரில் சாய ஆலைகள் மூடப்படும் அபாயம்!



திருப்பூர், மார்ச்.11-

போர் எதிரொலியாக மூலப்பொருட்கள் விலை உயர்வால் திருப்பூரில் சாய ஆலைகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. போர் காரணமாக மூலப்பொருட்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மூலப் பொருள்கள் விலை உயர்ந்துள்ளது. இஸ்ரேல் ஈரான் போர் காரணமாக மூலப்பொருட்கள் விலை உயர்வால் துணிகளுக்கு சாயமிட கிலோவுக்கு ரூ.20 உயர்ந்தது. திருப்பூரில் இயங்கி வரும் 80% சாய ஆலைகளில் அடுத்து வரும் 10 முதல் 15 நாட்களுக்கான சாயங்கள் மட்டுமே இருப்பு உள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் போர் நீடித்தால் அடுத்த 15 நாட்களுக்குப் பிறகு சாய ஆலைகள் முடங்கும் அபாயம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹரியானாவில் கபாடியாவாஸ் கிராமத்தில் கட்டுமான பணி யின்போது மண் சரிந்து 7 தொழிலாளர்கள் உயிரிழப்பு!



சண்டிகர், மார்ச்.11-

ஹரியானாவில் கபாடியாவாஸ் கிராமத்தில் கட்டுமான பணி யின்போது மண் சரிந்து 7 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 150 ஏக்கர் பரப்பளவில் ரியல் எஸ்டேட் நிறுவனம் அடுக்குமாடி குடியிருப்பு கட்ட அஸ்திவாரம் தோண்டியபோது மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

ஹரியானாவில் கபாடியாவாஸ் கிராமத்தில் கட்டுமானப் பணியில் இருந்த ஒரு கட்டிடத்தின் சுவர் திடீரென இடிந்து விழுந்ததில், 7 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 5 தொழிலாளர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

சுவர் இடிந்து விழுந்த தருணத்தில், சுமார் 12 முதல் 15 தொழிலாளர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டனர். இது குறித்து தகவல் அறிந்தவுடன், உள்ளூர் போலீசாரும் மாநில பேரிடர் மீட்புப் படையினரும் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டனர்.

"இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். துரதிர்ஷ்டவசமாக அவர்களில் 7 பேர் உயிரிழந்துவிட்டனர். 4 பேர் பலத்த காயங்களுடன் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்" என்று காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக அரசு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த விபத்து குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# விளையாட்டுத் துறையை ஊக்கப்படுத்தும் புதுச்சேரி அரசு: வெற்றி வீரர்களுக்குப் பரிசுகள் வழங்கி கௌரவம்



புதுச்சேரி, மார்ச் 11-

புதுச்சேரி அரசு விளையாட்டு மற்றும் இளைஞர் நல இயக்கம் மற்றும் புதுச்சேரி விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து நடத்தும், வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கான ரொக்கப் பரிசு வழங்கும் விழா, புதுச்சேரி கம்பன் கலையரங்கத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

சர்வதேச, தேசிய மற்றும் தென் மண்டல அளவிலான இறகுப்பந்து (Badminton), கயாக்கிங் (Kayaking), நெட்பால் (Netball), ரோல் பால் (Roll Ball), யோகா, டென்னிஸ் பால் கிரிக்கெட் மற்றும் பிரிட்ஜ் (Bridge) உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்று, பதக்கங்களை வென்று புதுச்சேரிக்கு பெருமை சேர்த்த வீரர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் புதுச்சேரி மாநிலத்தின் துணை நிலை ஆளுநர் K. கைலாசநாதன், முதலமைச்சர் நா. ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் ஏம்பலம் R. செல்வம், மற்றும் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோர் கலந்து கொண்டு, வெற்றி பெற்ற வீரர்களுக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தினர். தங்களது திறமையால் மாநிலத்திற்குப் பெருமை தேடித்தந்த வீரர்களைத் தலைவர்கள் நேரில் அழைத்துச் சால்வை அணிவித்து வாழ்த்தியது, அங்கிருந்த வீரர்களிடையே மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது.



# அலங்காநல்லூரில் முதல்வர் திறந்து வைத்த புதிய யூனியன் அலுவலகத்தில் குத்துவிளக்கேற்றிச் சிறப்பித்தார் எம்.எல்.ஏ

அலங்காநல்லூர், மார்ச். 11-

மதுரை மாவட்டம், அலங்காநல்லூரில் 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் பழைய கட்டிடத்தில் இயங்கி வந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் பதிலாக, புதிய நவீன அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டது. சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாகப் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

அமைச்சர் மூர்த்தி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் ஆகியோரிடம் பொதுமக்கள் விடுத்த கோரிக்கையின் பேரில், சுமார் ₹640 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இக்கட்டிடம் கட்டப்பட்டது. கீழ் மற்றும் மேல் தளங்களுடன், லிப்ட் வசதி மற்றும் பல்வேறு நவீன அறைகளுடன் இந்த அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, அலங்காநல்லூரில் நடைபெற்ற நிகழ்வில் எம்.எல்.ஏ. வெங்கடேசன் ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கேற்றி அலுவலகத்தைப் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கதிரவன், வள்ளி, திமுக ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், பரந்தாமன், முத்தையன், அருண், ஒன்றிய பொருளாளர் சுந்தர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, சேதுசீனிவாசன், காயத்ரி இதயச்சந்திரன், பாலமுருகன், ஈஸ்வரி சீனிவாசன், அழகுமணி, ஒன்றிய அமைப்பாளர் சந்தனகருப்பு, பிரதாப்,யோகேஷ், தவசதீஷ், ஒப்பந்தக்காரர்கள் குமார், கண்ணன், பரந்தாமன், உட்பட அரசு அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ கோமதி அம்பாள் டிராவல்ஸ்



ஏர் புஷ்பேக் சொகுசு பேருந்து வாடகைக்கு கிடைக்கும்
சங்கரன்கோவில்
ஆறுமுகம் - 98657 64957

கேரளா பர்னிச்சர்




ரயில்வே பீட்டர் ரோடு, சங்கரன்கோவில் 627756
9895544685 / 7092779356

# சித்தையன்கோட்டையில் ₹50 இலட்சம் மதிப்பில் புதிய சமுதாயக்கூடம்: அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்தார்



திண்டுக்கல், மார்ச்.11-

திண்டுக்கல் மாவட்டம், சித்தையன்கோட்டை பேரூராட்சி 11 வது வார்டில் ரூ. 50 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய சமுதாயக்கூட திறப்புவிழா நடைபெற்றது. விழாவிற்கு பேரூராட்சி மன்றத்தலைவர் போதும்பொண்ணு முரளி தலைமை தாங்கினார். திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, பேரூர் கழக செயலாளர் சக்திவேல், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ஜாகிர்உசேன், முன்னாள் பேரூராட்சி மன்ற துணை தலைவர் தங்கப்பாண்டியன், மாவட்ட பிரதிநிதி சௌந்திர பாண்டியன், முன்னாள் நகர செயலாளர் ஆறுமுகம், சிறுபான்மை யினர் அணியைச் சேர்ந்த மரைக்காயர், வார்டு உறுப்பினர்கள் தியாகு (எ) முத்துக்குமார், லாவண்யா சுரேஷ், திமுக வார்டு செயலாளர் தங்கவேல், மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயல் அலுவலர் ஜெயமாலு வரவேற்று பேசினார்.

விழாவில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தியபின்பு, ரூ. 50 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய சமுதாயக்கூடத்தை திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றிவைத்த பின்பு பொது மக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி; அவர்கள், நான் ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்ட நாள் முதல் இன்று வரை எனக்கு ஆதரவு அளித்து வரும் பேரூராட்சிகளில் சித்தையன்கோட்டையும் ஒன்று. கழகத்தை கட்டிக்காத்த நிர்வாகிகள் இந்த ஊரில் அதிகம் உள்ளனர். ஒவ்வொரு முறையும் நான் சித்தையன்கோட்டைக்கு வரும்போதும் நான் அவர்களைத்தான் நினைத்துக் கொள்வேன். இன்று இங்கு சமுதாயக்கூட திறப்பு விழா நடைபெற்றாலும், வார்டு உறுப்பினர் தியாகுவும், சௌந்திரபாண்டியனும் நலத் திட்டவிழாவாகவே மாற்றிவிட்டனர்.

பள்ளி மாணவர்களுக்கு உபகரணங்கள், அங்கன்வாடி மையங்களுக்கு உபகரணங்கள், குடிமை பயிற்சி படிக்கும் மாணவர்களுக்கு புத்தகங்கள், மகளிர் தினத்தை முன்னிட்டு மாணவிக்கு சைக்கிள் வழங்குதல், ஏழை பெண் குழந்தைகளுக்கு நிதி உதவி வழங்குதல் போன்றவற்றை சிறப்பாக நடத்திவிட்டனர். குறிப்பாக இந்த விழாவில் நான் ஒன்றை சொல் லவேண்டுமென்றால், ஒரு அரசு விழாவில் அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் தெரியும் வண்ணம் பதாகைகள் வைத்திருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

நிகழ்ச்சியில் அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளர்கள் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், கணேசன், பேரூராட்சி; இளநிலைப் பொறியாளர் முத்துக்குமார், பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் அபுபக்கர், தலைமை எழுத்தர் முரளிமோகன், உதவி பொறியாளர் கணக்கர் அப்துல்கரீம், பிளம்பர் ஜெயராஜ் உட்பட அலுவலக பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக விழாவிற்கு வந்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மதி நடனப் பள்ளியைச் சேர்ந்த மாணவிகள் நடனமாடியபடி மலர்த்தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# விறகு அடுப்பு பயன்படுத்தும் நிலை: சிலிண்டர் தட்டுப்பாடு குறித்து ஆனி ராஜா சாடல்



புதுச்சேரி, மார்ச்.11-
‘‘நாடு முழுவதும் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் விறகு அடுப்பு பயன்படுத்தும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். நாட்டில் என்ன நடக்கிறது என்பதை மத்திய அரசு மக்களுக்கு தெளிவுப் படுத்த வேண்டும்’’ என்று இந்திய கம்யூனிஸ்ட் அகில இந்திய செயலர் ஆனி ராஜா தெரிவித்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி மாநில குழு கூட்டத்தில் அகில இந்திய செயலாளர் ஆனி ராஜா, தேசிய அரசியல் விளக்க உரையாற்றினார். மாநில செயலாளர் அ.மு.சலீம் மாநில அரசியல் தேர்தல் பணி குறித்து உரையாற்றினார். தேசிய குழு உறுப்பினர் தினேஷ் பொன்னையா வேலை அறிக்கை வாசித்தார். இந்நிகழ்வில் முன்னாள் எம்எல்ஏ நாரா கலைநாதன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.இக்கூட்டத்தில் வக்பு வாரியத்தில் ஆர்எஸ்எஸ் பற்றாளர் இருப்பதால் அதை மாற்றி அமைக்க வேண்டும், ப்ரிபெய்டு மீட்டர் திட்டத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும், ஏஎப்டி, பாரதி, சுதேசி மில்களை இணைத்து ஜவுளி பூங்கா அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய சிபிஐ அகில இந்திய செயலர் ஆனி ராஜா, ”வரும் 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முடிவு எடுத்து, அதை நோக்கி நகர்கிறோம். இந்த ஐந்து மாநிலங்களுக்கு மட்டுமல்லாது இந்தியா முழுவதற்கும் முக்கியமான தேர்தல் இது. இந்தியாவில் பாசிச ஆட்சி இருக்கிறது.இந்தியாவின் அரசியல் சாசன சட்டத்தின் படி ஆட்சி நடைபெறவில்லை. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறும் கொள்கைகளை மோடி அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தியாவை அடமானம் வைத்து விட்டார்கள். எரி பொருள் தட்டுப்பாடு பற்றி எந்த கவலையும் இல்லாமல் அமெரிக்காவின் முடிவுகளுக்கு பாஜக அரசு செவி சாய்த்து வருகிறது.

ஐந்து மாநிலங்களில் தேர்தல் அந்தந்த சட்டமன்றங்களுக்கான தேர்தல் மட்டுமல்ல இந்தியாவை காப்பாற்றுவதற்கான தேர்தல். மதச்சார்பற்ற சக்திகள் ஒன்றிணைந்து இந்தத் தேர்தலை சந்திக்கிறோம். புதுச்சேரியில் இண்டியா கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட்4 தொகுதிகளை கேட்டுள்ளது. நாடு முழுவதும் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாட்டில் என்ன நடக்கிறது? எங்கிருந்து நாம் கச்சா எண்ணெய் வாங்குகிறோம்? எவ்வளவு வருகிறது? என மத்திய அரசு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். பல இடங்களில் விறகு அடுப்பு பயன்படுத்தும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்’’ என்று தெரிவித்தார்.

# துணை முதல்வர் நலத்திட்டங்களால் விளையாட்டு வீரர்கள் உலகளவில் சாதனை படைத்து வருகின்றனர் அமைச்சர் பெருமிதம்

சின்னாளபட்டி மார்ச். 11-
திண்டுக்கல் மாவட்டம்; ரெட்டியார்சத்திரம் தெற்கு மற்றும் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராம ஊராட்சிகள் மற்றும் கன்னிவாடி, ஸ்ரீராமபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில்; வசிக்கும் மாணவர்களின் நலன் கருதியும், அப்பகுதியைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்களின் நலன் கருதியும், 110 கிரிக்கெட் குழுவினருக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி சொந்த செலவில் கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கும் விழா கன்னிவாடி அறிஞர் அண்ணா சந்தை திடலில் நடைபெற்றது. விழாவிற்கு ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் முன்னாள் பெருந்தலைவரும், தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலளார் ப.க.சிவகுருசாமி, கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஆகியோர் தலைமை தாங்கினார்கள். ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் எம்.இன்பராஜ், கன்னிவாடி பேரூராட்சி மன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம்,



பேரூர் கழக செயலாளர் இளங்கோவன், ஸ்ரீராமபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் சகிலாராஜா, துணைத்தலைவர் முருகேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ப.ராஜேஸ் பெருமாள் ஆகியோர் முன்னி;லை வகித்தனர். மேற்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர் மாங்கரை திருப்பதி வரவேற்று பேசினார்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட அமைச்சர் ஐ.பெரியசாமி, மாணவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் மத்தியில் பேசும்போது, இப்பகுதியில் கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் அதிகம் உள்ளனர். இந்தியாவே திரும்பிப்பார்க்கும் அளவிற்கு தமிழக விளையாட்டு வீரர்கள் உலக அளவில் சாதனை படைத்து வருகிறார்கள். குக்கிராமத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், விளையாட்டுத் துறையில் சாதனை படைத்து வருகிறார்கள். அதற்கு காரணம் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகளும், சாதனை திட்டங்களும்தான் என்றார்.

மாணவர்களின் நலன் கருதி நான் அமைச்சராக இருந்தபோது அண்ணா பொறியியல் கல்லூரி, இப்போது அமைச்சராக பொறுப்பேற்ற பின்பு இரண்டு ஒன்றியங்களிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டுவந்ததுபோல் கிராமப்புற மாணவர்கள், மற்றும் விளையாட்டு வீரர்கள் நலன் கருதி, ரெட்டியார்சத்திரம் மற்றும் ஆத்தூர் ஒன்றியங்களில் மாபெரும் விளையாட்டு அரங்கம் அமைய உள்ளது என்றபோது அங்கு கூடியிருந்த மாணவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் மகிழ்ச்சியில் கை தட்டி ஆரவாரம் செய்தனர்.

பின்னர், 110 கிரிக்கெட் குழுவினருக்கு கிரிக்கெட் போட்டிகளுக்கான விளையாட்டு உபகரணங்களை வழங்கி சாதனை படைக்க வேண்டுமென வாழ்த்தினார். விழாவில் மாணவரணி அமைப்பாளர் செல்வம், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, சுப்புலெட்சுமி வள்ளுவதாஸ், கோனூர் திருப்பதி, ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் கரிசல்பட்டி பால்ராஜ், அம்மாபட்டி ரவி, மாவட்ட பிரதிநிதிகள் பெருமாள், எல்லை. ராமகிருஷ்ணன், இளங்கோ, கரிசல்பட்டி அமல இளவரசு, ஜோசப், போளியம்மனூர் ராஜ் குமார், உட்பட திமுக நிர்வாகிகள், ஊராட்சி மன்ற செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிறைவாக ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் அருளானந்து நன்றி கூறினார்.



# விழிப்புணர்வுடன் கூடிய கொண்டாட்டம்: நெத்திமேட்டில் களைகட்டிய மக்கள் சட்ட உரிமைகள் கவுன்சில் மகளிர் தின விழா

சேலம், மார்ச். 11-
மக்கள் சட்ட உரிமைகள் கவுன்சில் சார்பில், சேலம் நெத்திமேடு பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் சர்வதேச மகளிர் தின விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் சேலம் மற்றும் கோவை மாவட்டங்களைச் சேர்ந்த ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.

விழாவில் மகளிருக்கான விழிப்புணர்வு, சமூகத்தில் பெண்களின் பங்கு மற்றும் மக்கள் பணி செய்வது குறித்த ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மகளிர் மேன்மையை வலியுறுத்தும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கேக் வெட்டி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டதோடு, பெண்களுக்குப் பரிசுகள் மற்றும் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில், விழாவில் மக்கள் சட்ட உரிமைகள் கவுன்சிலின் மாநிலத் தலைவர் சந்திரசேகரன், மாநில மகளிர் அணித் தலைவி திவ்யலக்ஷ்மி, மாநிலச் செயலாளர் ருக்மணிதேவி மற்றும் கவுன்சிலின் முக்கிய நிர்வாகிகள் உள்ளிட்டோர் திரளாகப் பங்கேற்று விழாவைச் சிறப்பித்தனர்.



# ஆண்டுக்கு 3 கேஸ் சிலிண்டர்கள் இலவசம் என உடுமலையில் எம்எல்ஏ. கே.ராதாகிருஷ்ணன் வாக்குறுதி

உடுமலைப்பேட்டை:, மார்ச்.11-
திருப்பூர் மாவட்டம், உடுமலை சட்டமன்றத் தொகுதியில் முப்பெரும் தலைவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், உடுமலை சட்டமன்ற உறுப்பினருமான கே.ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு பொதுமக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், வரும் தேர்தலில் அதிமுக வெற்றி பெற்றால் உடுமலை மக்களுக்கு ஆண்டுக்கு 3 கேஸ் சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும் எனத் தனது தேர்தல் வாக்குறுதியாக அறிவித்தார். இந்த அறிவிப்பு பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

நிகழ்வில், உடுமலை நகரக் கழகச் செயலாளர் ஹக்கீம், நகரக் கழக அவைத்தலைவர் சாமி (எ) சிவராஜ், மாவட்டக் கழக இணைச் செயலாளர் சவுந்தரி சீனிவாசன், நகரக் கழகத் துணைச் செயலாளர்கள் ஆறுமுகம், சரண்யாதேவி, சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் ஏராளமான அதிமுக கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரியில் உணவகங்கள் முடங்கும் அபாயம்: வணிக சிலிண்டர் விநியோகம் அதிரடி நிறுத்தம்

புதுச்சேரி, மார்ச்.11-
மத்திய அரசின் புதிய உத்தரவின் அடிப்படையில், புதுச்சேரியில் உள்ள ஓட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு விநியோகிக்கப்படும் வணிக ரீதியான (Commercial) எரிவாயு சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாக கேஸ் ஏஜென்சிகள் அறிவித்துள்ளன. இந்தத் திடீர் அறிவிப்பு புதுச்சேரி உணவகத் உரிமையாளர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஓட்டல்கள் வழக்கம் போல இயங்கி வரும் நிலையிலும், புதிய சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதால் கையிருப்பில் உள்ள சிலிண்டர்கள் தீர்ந்தவுடன் சமையல் பணிகளைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், நாளை முதல் புதுச்சேரியில் உள்ள பெரும்பாலான ஓட்டல்கள் மூடப்படும் அபாயம் உருவாகியுள்ளது. இதன் காரணமாகச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் உணவின்றித் தவிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.



■ விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், ஆவியூர் கிராமத்தை சேர்ந்த முத்துக்குமரன் என்பவரின் மகள் துர்காதேவி கடந்த (2/3/2026) அன்று பன்னிரெண்டாம் வகுப்பு பொது தேர்வு எழுத மதுரை மையத்தில் உறவினரின் வாகனத்தில் சென்றபோது, விபத்து ஏற்பட்டு உயிரிழந்தமைக்காக மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாட்சியர் அறிக்கையின் பேரில், மாவட்ட ஆட்சியரின் அறிவுரையின்படி உயிரிழந்த துர்காதேவியின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய்.3 லட்சத்திற்கான காசோலையை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் வழங்கினார்.



# விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் நாம் தமிழர் கட்சி: திசையன்விளையில் மட்டைப்பந்து திருவிழா

## உவரி செல்வ மாதா அணி முதல் பரிசைத் தட்டிச் சென்றது

திசையன்விளை, மார்ச். 11-
திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையில், உலக மகளிர் தினத்தை முன்னிட்டு நாம் தமிழர் கட்சியின் ராதாபுரம் சட்டமன்ற தொகுதி சார்பில் ஒரு நாள் மட்டைப்பந்து (கிரிக்கெட்) போட்டி நடைபெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் உவரி செல்வ மாதா அணி முதல் பரிசைத் தட்டிச் சென்றது. திசையன்விளை ஓ சி சி அணி இரண்டாம் பரிசையும், ஜெயம் ஸ்போர்ட்ஸ் கிளப் மூன்றாம் பரிசையும் பெற்றன. அதனைத் தொடர்ந்து திசையன்விளை பிளாஸ்டர் பாய்ஸ் நான்காம் பரிசையும், குமாரபுரம் அணி ஐந்தாம் பரிசையும் வென்றன.

சிறப்பு அழைப்பாளராக நாம் தமிழர் கட்சியின் ராஜ பாரோன் கலந்து கொண்டார். வெற்றி பெற்ற அணிகளுக்கு ராதாபுரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கிரிஜா தாமரைப் பாண்டியன் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். விழாவிற்கான ஏற்பாடுகளை மாநில விளையாட்டு பாசறை செயலாளர் ராமச்சந்திரன் மிகச்சிறப்பாகச் செய்திருந்தார். ஏராளமான இளைஞர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் இப்போட்டியை ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர்.

# திருப்பூர் தெற்கு எம்எல்ஏ.வின் அதிரடி: ஒரே நாளில் ₹67.25 இலட்சம் மதிப்பிலான திட்டங்கள் தொடக்கம்



திருப்பூர், மார்ச். 11-
திருப்பூர் மத்திய மாவட்டம், பல்லடம் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆறுமுத்தாம்பாளையம் ஊராட்சியில் பல்வேறு மக்கள் நலத்திட்டப் பணிகளுக்கான திறப்பு விழா மற்றும் பூமி பூஜை நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் நா.சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பணிகளைத் துவக்கி வைத்தார்.

*புதிய அங்கன்வாடி:* அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ₹17.25 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய கட்டிடம் திறக்கப்பட்டது.

*சாலை வசதி:* சுவாமி முனியப்பா நகரில் ₹10 இலட்சம் மதிப்பில் கான்க்ரீட் சாலை அமைக்கப் பூமி பூஜை செய்யப்பட்டது.

*குடிநீர் திட்டங்கள்:* மலையாம்பாளையம் மற்றும் கலைஞர் நகர் பகுதிகளில் தலா ₹22.7 இலட்சம் மற்றும் ₹17.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது.

*கலைஞர் கனவு இல்லம்:* இத்திட்டத்தின் கீழ் தகுதியான பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டன.

மொத்தம் ₹67.25 இலட்சம் மதிப்பிலான இத்திட்டப் பணிகளின் தொடக்க விழாவில், திமுக மாவட்ட துணை செயலாளர் வக்கீல் குமார்,பல்லடம் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் சீனிவாசன், பல்லடம் முன்னாள் ஒன்றிய குழு பெருந்தலைவர் தேன்மொழி, மாவட்ட பிரதிநிதி சின்னப்பன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் இந்திரவிஜய், பல்லடம் கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கவுதம், பொங்கலூர் மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் லோகு பிரசாந்த், கழக நிர்வாகிகள் கவிதா, கார்த்திக், விஸ்வநாதன், சுரேஷ்குமார், முத்துசாமி மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



■ புதுச்சேரி ஆளுநர் மாளிகையின் பாதுகாப்புக் கோட்டையை மீறி, ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த தனியார் கல்லூரி பொறியியல் மாணவர் ஒருவர் உள்ளே நுழைந்து அங்கேயே தூங்கிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.ஆளுநர் மாளிகையின் பலத்த பாதுகாப்பு வளையங்களையும் மீறி, அந்த மாணவர் எவ்வாறு உள்ளே நுழைந்தார் என்பது மர்மமாக உள்ளது. அதிகாலை நேரத்தில் ஆளுநர் மாளிகைப் பகுதியில் இருந்த அதிகாரிகள், அந்த மாணவர் தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக அந்த மாணவரைப் பிடித்துக் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.இந்தச் சம்பவம் குறித்து டிஐஜி உள்ளிட்ட உயர் அதிகாரிகள் அடங்கிய குழு, அந்த மாணவரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகிறது. அத்துமீறிய மாணவர் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதால், அவர் திட்டமிட்டுச் செய்தாரா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது. நாட்டின் மிக முக்கியப் பிரமுகர்கள் வசிக்கும் இடத்திலேயே பாதுகாப்பு மீறல் ஏற்பட்டது, புதுச்சேரியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்துப் பலத்த கேள்விகளை எழுப்பியுள்ளது.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000



■ நெல்லை மாவட்டம் ராதாபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 4ம் வகுப்பு படித்து வரும் மாணவி ஜெஸ்ரீ, நி.வெ.செ அரசு மேல்நிலைப் பள்ளியில் 6ம் வகுப்பு படிக்கும் மாணவன் ஸ்ரீ செல்வ க்ரிஷ் ஆகிய இருவரும் இணைந்து தான் படிக்கும், படித்த பள்ளிக்கு தங்களால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டுமென விரும்பினர். இதனைத் தொடர்ந்து. ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு ஸ்பீக்கர் வாங்கி கொடுக்க முடிவு செய்து, அதை பள்ளி ஆண்டு விழா அன்று தலைமையாசிரியர் முன்னிலையில் ஆசிரியர்களிடம் ஒப்படைத்தனர். இச்செயலை செய்த அண்ணன், தங்கைக்கு ஆசிரியர்கள் பாராட்டுக்களை தெரிவித்தனர்.



## தகுதியான மனுக்களுக்கு உடனே தீர்வு: தென்காசி மாவட்ட வருவாய் அலுவலரின் அறிவுறுத்தல்

தென்காசி, மார்ச். 11-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் தலைமை தாங்கி, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றார்.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள், பட்டா மாறுதல் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 656 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களைப் பெற்றுக் கொண்ட மாவட்ட வருவாய் அலுவலர், அவை தகுதிவாய்ந்த மனுக்களா என்பதைத் தனித்தனியாக விசாரணை செய்து, விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மனுதாரர்களுக்கு உரிய காலத்திற்குள் பதில் அளிப்பதையும் உறுதி செய்யுமாறு அவர் அறிவுறுத்தினார்.

நிகழ்வில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, தனித்துணை ஆட்சியர் நம்பிராயர், மாவட்ட ஆட்சியரின் நேர் முக உதவியாளர் செல்வக்குமார் மற்றும் அனைத்துத்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



## புளியங்குயில் ₹12 இலட்சம் மதிப்பிலான பயணிகள் நிழற்குடையை எம்எல்ஏ. சதன் திருமலைக்குமார் திறந்து வைத்தார்

புளியங்குடி, மார்ச். 11-

புளியங்குடி அரசுப் பணிமனை எதிரே, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலைக்குமார் அவர்களின் 20242025 ஆம் ஆண்டு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ₹12 இலட்சம் செலவில் பயணிகள் நிழற்குடை கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்குப் புளியங்குடி நகர்மன்றத் தலைவர் விஜயா சவுந்திரபாண்டியன் தலைமை வகித்தார். நகராட்சி ஆணையாளர் நாகராஜ் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலைக்குமார், புதிய பயணிகள் நிழற்குடையைத் திறந்து வைத்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அர்ப்பணித்தார்.

இந்நிகழ்வில் நகர்மன்ற உறுப்பினர் பாலசுப்ரமணியன் நன்றியுரை வழங்கினார். இதில் பொதுக்குழு உறுப்பினர் பத்திரம் சாகுல் ஹமீது, அரசு போக்குவரத்து மேலாளர் குமார், மதிமுக நகரச் செயலாளர் ஜாகீர் உசேன், மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், நுகர்வோர் அமைப்பின் நிர்வாகிகள், அப்துல் கலாம் அமைப்பின் நிர்வாகிகள் எனப் பல்வேறு தரப்பினரும் திரளாகக் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.



## தாராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் காணொலி மூலம் திறப்பு அமைச்சர் குத்துவிளக்கேற்றினார்

தாராபுரம், மார்ச். 11-

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்காகக் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டிடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சென்னையில் உள்ள தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து தாராபுரத்தில் நடைபெற்ற நிகழ்வில், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் புதிய அலுவலகத்தில் குத்துவிளக்கேற்றிச் சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் பலர் உடனிருந்தனர். புதிய அலுவலகம் திறக்கப்பட்டதன் மூலம் இப்பகுதி மக்களின் நிர்வாகத் தேவைகள் இனி விரைவாக நிறைவேற்றப்படும்.

## திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் மகளிர் தின விழா

திசையன்விளை, மார்ச்.11-

திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் மகளிர் தின விழா சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் து. லில்லி தலைமையேற்று தலைமையுரையாற்றினார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இரா. தணிகைச் செல்வி அவர்கள் வரவேற்புரையாற்றினார். ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் k. தமிழ்ச்செல்வி அவர்கள் சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தினார்.



இந்நிகழ்ச்சியில் திசையன்விளை சாந்தா ரியாலிட்டி நிறுவனத்தின் நிறுவனர் T. சாந்தகுமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பெண்களின் முன்னேற்றம் குறித்து உரையாற்றி மாணவிகளுக்குத் தன்னம்பிக்கை ஊட்டினார். மேலும் மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் அளித்தார். பின்னர் கல்லூரி வளாகத்தில் மரக்கன்று நடப்பட்டது. தொடர்ந்து மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விழாவின் நிறைவாக வணிகவியல் துறைப் பேராசிரியர் முனைவர் பெ. ஜெயஸ்ரீ நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சியை தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் N. ஆனந்தவேணி தொகுத்து வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் மற்றும் அனைத்துத் துறைகளின் பெண் பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவிகள் இணைந்து சிறப்பாகச் செய்திருந்தனர்.



## ஆஸ்கார் உலக சாதனைப் போட்டியில் முதலிடம்: வி.எஸ்.ஆர் பள்ளி மாணவனுக்குக் குவிந்த பாராட்டுகள்

திசையன்விளை, மார்ச். 11-

தூத்துக்குடியில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான 'ஆஸ்கார் உலக சாதனை' முயற்சியில், திசையன்விளை வி.எஸ். ஆர் மெட்ரிக் பள்ளியின் யு.கே.ஜி மாணவர் முகமது அப்ராஸ்கான் உலக சாதனை படைத்துள்ளார்.

BMC பள்ளியில் கராத்தே, யோகா, சிலம்பம், ஸ்கேட்டிங் மற்றும் செஸ் என ஆறு பிரிவுகளில் நடைபெற்ற இந்தப் போட்டியில், 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் ஸ்கேட்டிங் பிரிவில் கலந்துகொண்ட முகமது அப்ராஸ்கான், ஒரு மணி நேரம் இடைவெளி இல்லாமல் தொடர் ஓட்ட ஸ்கேட்டிங் செய்து முதலிடத்தைப் பிடித்து உலக சாதனை படைத்தார்.

வெற்றி பெற்ற சிறுவனை பள்ளித் தாளாளர் வி.எஸ்.ஆர். ஜெகதீஷ் நேரில் அழைத்து, பாராட்டி விருதுகளை வழங்கிக் கௌரவித்தார். மாணவனின் இந்தச் சாதனைக்கு உறுதுணையாக இருந்த உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பள்ளியின் துணை முதல்வர் விஜயா தினகரன் உள்ளிட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் தாளாளர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார். பள்ளி மாணவனின் இந்த அபார சாதனையை சக மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் வெகுவாகப் பாராட்டி வருகின்றனர்.



## ஒற்றுமைக்கு ஒரு சான்று: சின்னாளபட்டி ஜீவா நகரில் அனைவரையும் ஒன்றிணைக்கும் மாரியம்மன் திருவிழா

சின்னாளபட்டி, மார்ச். 11-

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி 15வது வார்டு ஜீவா நகரில் அமைந்துள்ள ஸ்ரீ சந்து மாரியம்மன் கோவில் கும்பிடு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. கடந்த 10 ஆண்டுகளாக, சாதி, மத பேதமின்றி அனைத்து சமுதாய மக்களும் ஒற்றுமையுடன் ஒன்றிணைந்து கொண்டாடும் விழாவாக இது திகழ்கிறது.

பெண் பக்தர்கள் நூற்றுக் கணக்கானோர் முளைப்பாரியுடன் ஊர்வலமாக சென்றனர். தோப்பில் அம்மனுக்கு அலங்காரம் செய்யப்பட்டு வழிபாடு செய்தனர். தீப ஆராதனை காண்பித்தவுடன் தோப்பிலிருந்து அம்மனை கோவிலுக்கு அழைத்து வந்தனர். அம்மன் கரகம் அலங்கரிக்கும் போது 5க்கும் மேற்பட்ட பெண்களுக்கு அருள் வந்தது. அம்மன் ஊர்வலம் சின்னாளபட்டி பிரிவு மற்றும் பூஞ்சோலை வழியாக கோவிலை வந்தடைந்தது. பக்தர்களுக்கு நீர் மோர், கம்மங்கூழ் பிரசாதம், அன்னதானம் நடைபெற்றது. பிறகு பொதுமக்கள் சார்பாக பொதுப் பொங்கல் வைக்கப்பட்டது. தொடர்ச்சியாக பக்தர்கள் மாவிளக்கு எடுத்து நேர்;த்திக் கடன் செலுத்தினார்கள். இளைஞரணி சார்பாக விளையாட்டு போட்டிகள் நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டது. மாலை 6 மணியளவில் அம்மனுக்கு சிறப்பு அபிசேக ஆராதனை செய்யப்பட்டு ஜீவா நகர் மக்கள் வழிபாடு செய்தனர். அதன் பிற்கு அம்மன் கரகம் கங்கையில் கரைப்பதற்காக எடுத்துச்செல்லப்பட்டது.

விழாவிற்கான ஏற்பாடுகளை விழா கமிட்டி தலைவர்; பைனான்சியர் எம்.ராஜபாண்டி, உப தலைவர்; எஸ். மாரியப்பன், செயலாளர்; பா.நாகேந்திரன், உப செயலாளர் அக்கினீஸ்வரன், பொருளாளர் ஏ.ராஜா, (பெயின்டர்) இணை செயலாளர் நவீன்குமார், துணைப் பொருளாளர் விக்னேஸ்வரன், தலைமையிலான விழா கமிட்டியார்களும் கௌரவ ஆலோசகர்கள் வார்டு உறுப்பினர் ராஜ், ரேசன் கடை ஏ.டேவிட்ராஜ், முன்னாள் பேரூராட்சி துணை தலைவர் டி.தங்கம், முன்னாள் சஞ்சய் காந்தி நெசவாளர் கூட்டுறவு சங்க மேலாளர் ஆர்.ராமராஜ், போர்வெல் பெருமாள் தலைமையிலான நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர். விழாவை முன்னிட்டு ஜீவா நகர் விழாக்கோலம் பூண்டிருந்தது. வார்டு உறுப்பினர் ராஜ் சார்பாக மாபெரும் அன்னதானம் நடைபெற்றது.



■ மதுரை மாவட்டம், வடக்கு வட்டம், அன்னை சத்தியா அரசு குழந்தைகள் இல்லத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேன் சார்பில் சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட கைப்பந்து விளையாட்டு மைதானம், வளாகத்தில் பேவர் பிளாக், மின்விளக்குகள் போன்ற முடிவுற்ற திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

G. Siva
99437 75284
63800 79305
S.PRATHIKA
INTERIOR
No.3-2-34, Nallaiya Nayakkar 4th Street,
Alanganallur, Madurai - 625501.
Modular Kitchen | Bed Room | Pooja Room

S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன்
ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P. மணிகண்டன் B.Com., 78452 54592
P. பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

SPARES
2 WHEELER
SDK
spare parts
HERO HONDA, TVS, BAJAJ,
ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

SRI GANAPATHY
ELECTRICALS
HARDARE & PIPES
#156, Jayakumar Lane, Omalur Road,
Five Road, Salem - 636 004
All Types of Electricals & Hardware Pipes Avail Here



98842 99777 91591 58769

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000